**+1,+2 அரசுப்பொதுத் தேர்வுகளில்மொழிப்பாடங்களில் இரண்டு தேர்வுகளை ஒரே தேர்வாக அனுமதித்தல் – அரசாணை**

சுருக்கம்

பள்ளிக் கல்வி – அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலைக் கல்வி முதலாமாண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு அரசு பொதுத் தேர்வுகளில், தற்போதுள்ள நடைமுறையில் உள்ள மொழிப்பாடம் (Language) மற்றும் ஆங்கிலப் ( English) பாடங்களில் உள்ள இரண்டு தாள்களை (Two Papers) இரண்டு தேர்வுகளாக எழுதுவதற்கு பதிலாக ஒருங்கிணைத்து ஒரே தாளாக (One Paper) தேர்வெழுத அனுமதி அளித்து –ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வித்(அதே) துறை

அரசாணை(நிலை) எண். 118

நாள்:09–06–2018
திருவள்ளுவர் ஆண்டு, 2018
விளம்பி வருடம், வைகாசி 26

படிக்கப்பட்டவை:

1. அரசாணை ( நிலை) எண்.2439, கல்வித்துறை நாள்.14.11.1977
2. அரசுக் குறிப்பாணை எண்.67770,கல்வித்துறை, நாள்.10.07.1979
3. அரசாணை ( நிலை) எண்.1188, கல்வித்துறை நாள்.12.07.1979
4. கடித (நிலை) எண்.2048, கல்வித்துறை, நாள்.11.09.1981
5. அரசாணை (நிலை) எண்.100, பள்ளிக்கல்வித் துறை , நாள்.22.05.2017
6. அரசாணை (2டி) எண்.50, பள்ளிக்கல்வித் துறை, நாள்.09.08.2017
7. அரசாணை (நிலை) எண்.227, பள்ளிக்கல்வித்துறை, நாள்.06.11.2017
8. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.016450/கே/இ3/2018, நாள்.31.05.2018

------

**ஆணை**

மேலே முதலாவதாக படைக்கப்பட்டுள்ள அரசாணையில், 1978–1979 ஆம் ஆண்டு முதல் பள்ளிகளில் மேல்நிலை வகுப்புகள் (Higher Secondary Classes) துவங்குவதற்கான அனுமதி,பாடத்திட்டங்கள், பள்ளி வேலை நேரம், பள்ளி நாட்கள் மற்றும் பாடத்திட்டத்திற்கான வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டது. மேலே இரண்டு மற்றும் நான்காவது வரை படிக்கப்பட்ட அரசாணை/ குறிப்பாணைகளில் முறையே, மேல்நிலைப்பள்ளி மாணக்கர்கள் சேர்க்கை மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வினை மார்ச் 1980 முதல் நடத்திடவும், மேல்நிலை முதலாமாண்டு / மேல்நிலை இரண்டாம் ஆண்டில் பகுதி–1, மொழிப்பாடத்தில் இரண்டு தேர்வுகளும் பகுதி–II ஆங்கிலத்தில் இரண்டு தாள்களும் (Papers) மற்றும் பகுதி III விருப்பப்பாடங்களில் நான்கு தாள்களுமாக மொத்தம் எட்டு தாள்களாக ஒரு பாடத்திற்கு, 200 மதிப்பெண்கள் வீதம், 1200 மதிப்பெண்கள் நிர்ணயம் செய்தும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

2. மேலே 5 முதல் 7 வரை படைக்கப்பட்டுள்ள அரசாணைகளில் முறையே, மேல்நிலை பாடத்திட்டத்தில், மேல்நிலை இரண்டாம் ஆண்டு மாநில அளவில் நடத்தப்படுகின்ற அரசு பொதுத்தேர்வு போன்றே மேல்நிலை முதலாமாண்டிறகும் பொதுத் தேர்வினை நடத்துதல்,அத்தேர்விற்கான மதிப்பீட்டு முறை, வடிவமைப்பு, நெறிமுறைகள் மற்றும் செய்முறை தேர்வு நடத்துதல் குறித்த ஆணை வெளியிடப்பட்டது.

3. மாணவர்களின் நலன் கருதி தமிழ் மற்றும் ஆங்கில மொழி பாடங்களுக்கு, ஆந்திரா தெலுங்கானா, கர்நாடகம், கேரளம் மற்றும் வட மாநிலங்களைப் போன்றே இரண்டு தாள்களுக்கு பதிலாக, வருகின்ற கல்வியாண்டு முதல் ஒரு தாளாக மாற்ற வேண்டும் என பல்வேறு கோரிக்கைகள் வரப் பெற்றுள்ளன.

4. மேற்காணும் கோரிக்கைகள் தொடர்பாக மாண்புமிகு அமைச்சர் பள்ளிக்கல்வ அவர்களின் தலைமையில் கடந்த 03/05/2018 அன்று நடந்த உயர்மட்டக் குழுவின் கூட்டத்தில், மேல்நிலை முதலாம் / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வில், மொழி தேர்வுகளுக்கான இரண்டு தாள்களை ஒருங்கிணைக்கும் போது,பாடப் பகுதிகளில் எவ்வித மாற்றமும் ஏற்படக்கூடிய வாய்ப்பு இல்லை என்பதாலும், பாடத்திட்டத்தில் உள்ள படங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்த வகையில் கேள்வித் தாள்கள் அமைய வேண்டும் என்ற கருத்தினை தெரிவித்து, இரண்டு தாள்களைக் கொண்ட ,இம் மாற்றம் மாணாக்கர்களை எவ்வித மன அழுத்தமும் இன்றி மொழிப் பாடங்களை கற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படும் என்பதால் இரண்டு தாள்களை கொண்ட மொழி மற்றும் ஆங்கிலத் தாள்களை ஒரே தாளாக இணைப்பதற்கு உயர்மட்டக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

5. மேலும், இந்நேர்வு தொடர்பாக பள்ளிக்கல்வி இயக்குநர் மேலை எட்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் செயற்குறிப்பு அளித்ததைத் தொடர்ந்து, அரசு தேர்வுகள் இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் ஆகியோர் தங்களது கருத்துக்களை அளித்துள்ளனர் அதன் சுருக்கம் பின்வருமாறு :-

(i) மொழிப்பாடம் மற்றும் ஆங்கிலப் பாடத்தில், பாடத்திற்கு இரண்டு தாள்கள் வீதம் தேர்வு எழுதுவதால், பருவ இடைத் தேர்வுகள் (Mid Term Examination), பருவத் தேர்வுகள் (Quarterly and Half Yearly Examination), ஆயத்த தேர்வுகள் (Preparatory Examination ) என தேர்வு நாட்களுக்குகென ஏறத்தாழ பத்து நாட்கள் செலவிடப்படுகின்றன.

(ii)மொழிப்பாடம் / ஆங்கிலப் படத்தில் இரு தாள்களில் இரு தேர்வுகள் எழுதுவதன் காரணமாக தேர்வு நாட்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் மாணக்கர்கள் மன அழுத்தத்திற்கு ஆளாகின்றனர்.

(iii) மேல்நிலை முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வில் தற்போது நடைமுறையில் உள்ள எட்டு தேர்வுகளுக்கு பதிலாக ஆறு தேர்வுகளாக குறையும்பொழுது மாணக்கர்களின் மன அழுத்தம் பெரிதும் குறையும்

(iv)ஒரே தாளாக தேர்வு நடத்தப்படும் போது தற்போதுள்ள பாடப்பிரிவுகளில் எந்த பகுதியையும் நீக்கம் செய்யப்படாமல் அனைத்தும் உள்ளடக்கியதாக அந்த ஒரு தாள் இருக்கும் வண்ணம் வினாத்தாள் தயாரிக்கலாம். இதனால், மாணவர்கள் எந்தப் பகுதியும் விட்டுவிடாமல் கற்றுத்தேர்ந்து, தேர்வு எழுதுகின்ற சூழல் ஏற்படும்.

(v)மேல்நிலை முதலாம் / இரண்டாம் ஆண்டிற்கான மொழி / ஆங்கிலம் இரண்டு தாள்களை ஒரே தாளாக ஒருங்கிணைக்க பாடத் திட்டக் குழுவிற்கு உயர்மட்டக் குழுவின் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. மேலும்,இம்மாற்றத்தினை ஆசிரியர் மற்றும் பெற்றோர் அடங்கிய குழுக்கள் ஏற்றுக் கொண்டுள்ளது.

6. இதையடுத்து கடந்த 04/06/2018 அன்று பள்ளிக்கல்வி இயக்குநர் தலைமையில் நடைபெற்ற, தமிழ்நாடு மாநில பொது பள்ளி கல்வி வாரிய கூட்டத்தில் இவ்வாறு மேல்நிலை முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான மொழி/ஆங்கில இரண்டு தாள்களை இணைக்கும்போது, ஆண்டு முழுவதும் நடக்கும் தேர்வுகள் சார்ந்து, கற்றல் கற்பித்தலுக்கு பயன்படுத்தக்கூடிய நாட்கள் அதிகரிக்கப்படுகிறது எனவும், தேர்வுகளின் எண்ணிக்கை ஆறு என குறையும் போது மாணவர்களின் மன அழுத்தம் பெரிதும் குறையும் என்ற நோக்கில் தமிழ்நாடு மாநில பள்ளிக் கல்வி வாரியம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

7. மேற்காண் நிலையில் பள்ளிக்கல்வி இயக்குநர், அரசு தேர்வுகள் இயக்குநர், மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் ஆகியோருடைய கருத்துக்களின் அடிப்படையில் இந்நேர்வினை அரசு கவனமாக பரிசீலித்து மாணவர்களின் மன அழுத்தத்தை குறைக்கும் வகையில் அரசு தேர்வுகள் இயக்குநரால் நடத்தப்படும் மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு பொதுத்தேர்வுகளில் தற்போதுள்ள நடைமுறையில் உள்ள மொழிப்பாடம் (Language) மற்றும் ஆங்கிலப் ( English) பாடங்களில் உள்ள இரண்டு தாள்களை (Two Papers) இரண்டு தேர்வுகளாக எழுதுவதற்கு பதிலாக ஒருங்கிணைத்து ஒரே தாளாக (One Paper) தேர்வெழுதஅனுமதித்தும், இதற்கான வினாத்தாள் கட்டமைப்பு மற்றும் மாதிரி வினாத்தாள் ஆகியவற்றை உருவாக்க மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு அனுமதி வழங்கியும் அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மை செயலர்